ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2163/4 - 2020 පෙබරවාරි මස 17 වැනි සඳුදා - 2020.02.17

2163/4 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: GA/IMA/LAN/05/02/10.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், காலி மாவட்டம், இமதுவ பிரதேச செயலாளர் பிரிவில், அட்டானிகித கிராம அலுவலர் பிரிவில் அட்டானிகித என்கின்ற கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் ஆரம்ப காணியின் வரைபடம் காலி 4286 மற்றும் 2019.12.05 ஆந் திகதி கொண்ட இறுதி கிராம வரைபின் இலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்ட முழு அளவிலான 2.0047 ஹெக்டயார் கீழே குறிப்பிடப்படுகின்ற பெயர்கள் மற்றும் அளவுகளுடன் கூடிய காணித்துண்டுகளின் எல்லைகள்:

01. துண்டு இல. 1; காணியின் பெயர்: இந்து ரெம்பவில ஹெவத் இந்துரெகொடை (ஹெம்டன் சுனாமி கிராமம்); ஆரம்ப உரிமை கோருபவர்: திரு. உபாலி விக்ரமசேக்கர, திருமதி செரி விக்ரமசேக்கர, திரு. லயனல் உபாலி த சில்வா, திருமதி. குசும் த சில்வா, திரு. ரெஜினோல்ட் அபேவீர; விஸ்தீரணம்: 2.0047 ஹெக்டயார்.

வடக்கு: கா 3604 ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கம் 3, 2 கா 2537 ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கம் 27, 26, 25 மற்றும் இந்துநில் வீதியின் சுனாமி கிராமம்; கிழக்கு: இந்துநில் வீதியின் சுனாமி கிராமம், வீதி (நெ.அபி.அதி) மற்றும் அட்டானிகித பிரஜை அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிலையம்; தெற்கு: அட்டானிகித பிரஜை அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிலையம், கா 2542 ஆரம்ப வரை படத்தின் துண்டு இலக்கம் 3, 1 கா 3604 ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கம் 11, 3, 9, 8 மற்றும் 3; மேற்கு: கா 2542 ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கம் 1, கா 3604 ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கம் 11, 3, 9, 8, 3, 2 மற்றும் கா 2537 ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கம் 27, 26 மற்றும் 25.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இமதுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. ஜீ. லக்ஷ்மீ காந்தி,
பிரதேச செயலாளர்,
இமதுவ.

பிரதேச செயலகம்,
இமதுவ,
2020, பெப்புருவரி 12.

03 - 05